**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 5/2019**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தாமோதரன் | மதம் | : இந்து |
| த/பெ | : பெருமாள் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 75 | கிராமம் | : சென்னை |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : சென்னை |

**04.11.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு தாக்கல் செய்துள்ள கௌதமி எனது மகள் என்றால் சரிதான். என் மகளின் நிரந்தர முகவரி அண்ணா நகர், சென்னை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து வாங்கும்போது நான் அந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா அல்லது தரப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. நான் முன்பணம் கொடுத்தபோது எழுதப்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். வழக்கு சொத்தை என் மகளுக்காக நாங்கள் அனைவரும் சேர்ந்து வாங்கி கொடுத்தோம் என்றால் ஆமாம்.

2. கிரைய ஒப்பந்தம் எந்த தேதியில் செய்தோம் என்றால் கிரையம் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு செய்தோம். நான் கிரைய ஒப்பந்தம் செய்யும்போது வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை போக முனுசாமி ரெட்டி பெயரில் இருந்தது என்றால் தெரியாது. நாங்கள் கிரையம் வாங்கும் முன்பு எங்களுக்கு கிரையம் கொடுத்த கணேச ரெட்டியார் பெயரில் சொத்திற்கு சம்மந்தமான ஆவணங்கள் இருந்ததா என்பதை பார்த்தோமா என்றால் ஆவணங்களை பார்க்கவில்லை. வாய்மொழி பாகம் என்று சொன்னார்கள். வாய்மொழி பாகம் என சொல்வதில் சொத்தின் பாகஸ்தர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால் எனக்கு தெரியாது. நானோ எனது மகளோ கிரைய ஒப்பந்தம் செய்யும்போது மற்ற பாகஸ்தர்களிடம் ஆட்சேபணை

உள்ளதா என்பதை கேட்டு தெரிந்து கொண்டோமா என்றால் மற்ற பாகஸ்தர்கள் யார் என்றே தெரியாது. ஆனால் ஊர் கோவிலில் வைத்து அவரது உறவினர்கள் முன்னிலையில் வைத்து பேசி முடிவு செய்துதான் முன்பணம் வாங்கினார்கள்.

3. கோவிலில் வைத்து பேசிய உறவினர்கள் யார் என்பதையோ கோவிலில் வைத்து பேசிய விவரத்தையோ எனது வழக்கிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் செய்த கிரைய ஒப்பந்ததின் அடிப்படையில்தான் கிரைய ஒப்பந்தத்தில் என்ன சொத்து உள்ளதோ அந்த சொத்தை தான் என் மகள் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்தம் செய்யும்போது கணேச ரெட்டி உயிருடன் இருந்தார் என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்தத்தில் கணேச ரெட்டி மற்றும் அவரது மகன், மகள் ஆகிய அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்து செய்துள்ளனர் என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தத்தில் கிரைய தொகை மற்றும் கிரைய முன்பணம் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் ஞாபகமில்லை. ரூ.3 லட்சத்திற்குட்பட்டதாகும். கிரைய ஒப்பந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது பணம் கொடுத்ததற்காக நாங்கள் எழுதி வாங்கிய ரசீதாகும்.

4. நாங்கள் பணம் கொடுத்த பின்புதான் கணேச ரெட்டி தனது மகன் நீலமேகம் என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் இல்லை. நாங்கள் பணம் கொடுக்கும் முன்பே செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டுவிட்டது. அந்த ஆவணத்தை பார்த்த பின்புதான் நாங்கள் முன் பணமே கொடுத்தோம். நாங்கள் 09.04.2007 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்தேன். தேதி சரியாக ஞாபகமில்லை. நான் பார்த்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் தேதி சொல்ல முடியுமா என்றால் 2007 ஆ 2008 ஆ என்பது தெரியவில்லை. நான் முன்பணம் கொடுத்த தேதியில் நீலமேகம் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் உள்ளிட்ட எந்த வருவாய் ஆவணங்கள் இருந்ததா என்றால் இல்லை.

5. போக முனுசாமி ரெட்டிக்கு அந்த ஊரில் நிறைய சொத்துக்கள் இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. போக முனுசாமி யார் என்பது தெரியுமா என்றால் கணேச ரெட்டியின் அப்பா ஆவார். கணேச ரெட்டிதான் அவரது மூத்த பிள்ளை ஆவார். போக முனுசாமி ரெட்டிக்கு அந்த ஊரில் எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்களுக்கு

கூட்டுறவு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டதாக சொல்லியுள்ளதில் அந்த அடமான ஆவணத்தை எப்போதாவது பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். கணேச ரெட்டியார் மற்றும் அவரது அண்ணன், தம்பிகள் அனைவரும் சேர்ந்துதான் கடன் வாங்கியுள்ளனர் என்றால் ஆமாம். அந்த கடனை எப்போது அடைத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் 2007 இறுதியில் அடைத்துவிட்டார்கள்.

6. நாங்கள் வாங்குவதற்கு முன்பு கணேச ரெட்டியும் அவரது சகோதரர்களும் எப்படி பிரித்து கொண்டார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் ஏற்கனவே என் மீது தாக்கல் செய்த அ.வ.எண்.107/2011 வழக்கில் அவர்களுக்குள் பாகம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை அந்த வழக்கில் தெரிந்துகொண்டேன். அ.வ.எண்.107/2011 வழக்கில்தான் அவர்களுக்குள் பாகம் நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியவந்தது என்றாலும் அதற்கு முன்பு அவர்களுக்குள் பாகம் நடைபெற்ற விவரம் எனக்கும் என் மகளுக்கும் தெரியாது என்றாலும் சரிதான். அ.வ.எண்.107/2011 வழக்கு தாக்கல் செய்தது யார் என்றால் கணேச ரெட்டியின் தம்பி ஆவார். போக முனுசாமி ரெட்டியின் சொத்துக்களுக்கு பாகம் கோரிதான் அ.வ.எண்.107/2011 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. அ.வ.எண்.107/2011 வழக்கில் நாங்கள் வாங்கிய பத்திரம் செல்லாது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.107/2011 வழக்கில் நான் வழக்கறிஞரை வைத்து நடத்தினேன் என்றால் சரிதான். அ.வ.எண்.107/2011 வழக்கு தாக்கல் செய்த 8 வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அ.வ.எண்.107/2011 வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டதா என்றால் அதில் தீர்ப்பு வந்துவிட்டது. அ.வ.எண்.107/2011 வழக்கின் தீர்ப்பை எதிர்த்து திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். தற்போதும் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றால் மேல்முறையீடு இன்னும் கோப்பிற்கு எடுக்கப்படவில்லை. எங்களுக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை. நாங்கள் சொத்தை வாங்கும்போது சொத்து யார் பெயரில் உள்ளது என்பதை வில்லங்க சான்று போட்டு பார்த்தோமா என்றால் நீலமேகம் பெயரில் மாறியிருந்தது.

8. நீலமேகம் பெயரில் இரண்டு செட்டில்மெண்ட் ஆவணம் உள்ளது என்றால் ஆமாம். அதில் முதலில் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் விவரம் தெரியுமா என்றால் அவர்கள் முதலில் எழுதிய ஆவணம் புல எண் தவறாக இருந்தது

என ரத்து செய்துவிட்டு புதியதாக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியதாக சொன்னார்கள். ரத்து செய்த ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. இரண்டாவதாக எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். இரண்டாவதாக எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தில் கணேச ரெட்டிக்கு சொத்து எப்படி வந்தது என்ற விவரத்தை எழுதியுள்ளார்களா என்றால் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து தனக்கு வந்த பாகத்தை தனது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார்.

9. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 செட்டில்மெண்ட் ஆவணத்தில் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து தனக்கு வந்த பாகத்தை தனது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக எங்காவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் **(சாட்சியிடம் வா.சா.ஆ 3 ஆவணம் படிக்க கொடுக்கப்பட்டது)** இல்லை. தனக்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளார். நீலமேகத்திற்கு அவரது அப்பா எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சான்றிட்ட நகல்தான் தாக்கல் செய்துள்ளேன். ரத்து செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூல ஆவணம் என்னிடம் இல்லை என்றால் சரிதான். முதன்முதலில் எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் வாங்கினேனா என்றால் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)